**அகலவத்த பிரதேச சபை 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அகலவத்த பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அகலவத்த பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை நிர்மாணிக்கப்பட்ட குக்குலந்தல பகல் காப்பு நிலையம் நிர்மாணிக்கும் கிரயம் ரூபா 6,889,483 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 10,528,724 ஆக அதாவது ரூபா 3,639,241 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | பெமினியாகொட பொதுக் காணி மற்றும் வீதி தனித்தனியாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 23,775,000 ஆன மீதியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெமினியாகொடவில் 61 பேர்ச் அளவான பொதுக் காணி ரூபா 9,150,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது காணியாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மானானஹேன பொது வீதியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 10,632,600 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 10,530,000 ஆக ரூபா 102,600 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | பௌதீக திட்ட வீதி நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 04 இன் கீழ் வழங்கல்களுக்கான கடன்கொடுத்தோராக ரூபா 25,670 ஒதுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 13,087 ஆக ரூபா 12,582 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல் களிலிருந்து கிடைக்க வேண்டிய விடயங்களாக குறிப்பிடப்பட்ட ரூபா 56,544 முத்திரை வரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்காக கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | பிரதேச செயலகத்தால் ரூபா 500,000 செலவில் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட களுபகன முன்பள்ளி பாடசாலைக் கட்டிடம் சபைக்கு கையளிக்கப்படாதிருந்த போதிலும் சபையின் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காகிதாதிகளின் இறுதி இருப்பு ரூபா 597,453 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 577,421 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 20,032 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | 2015 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது அகற்றக்கூடிய நிலையில் கொண்டு வரப்படுகின்ற வீதி செப்பனிடுகையின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 3,180,000 ஆன புத்தகப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | சபைக்குச் சொந்தமான 18 காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சபைக்கு கையேற்று மதிப்பீடு செய்து சகல நில வரைபடங்களும் தயாரிக்கப்படும். | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஓ) | நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக நிதி உதவிகளை பகிர்ந்தளிக்கும் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமல் ரூபா 600,000 கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆளுனரின் அங்கீகாரம் கிடைக்காதிருந்தமையால் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 31,091,976 சொத்துக்களின் பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 1,361,532 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | சொத்துக்கள் பெறுமானத்தேய்வு சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 33,267,541 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,887,800 ஆக இருந்தது.

### 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,150,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,100,000 என்பவற்றை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பட்டோலைகள் தயாரித்து உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மேல் மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் கிரயம் ரூபா 6,889,483 செலவில் 06 கட்டங்களில் பூர்த்தி செய்யப்பட்ட உக்குலந்த பகல் காப்பு நிலையம் 2020 நவம்பர் மாதம் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக தேவையான பெண் காப்பாளர் மற்றும் உதவியாளர்களை | பெண் காப்பாளர் மற்றும் உதவியாளர்களை சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் போதியளவான விண்ணப்ப பத்திரங்கள் கிடைக்காமையால் ஆட்சேர்ப்பை மேற்கொள்ள முடியாதிருந்தது. | ஆட்சேர்த்தலை மேற்கொண்டு சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேர்ப்பதில் உள்ள தாமதத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தக் கட்டிடம் பயனற்றுக் காணப்பட்டது. | | |
| (ஆ) | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,250,000 ஆன JCB இயந்திரம் இயந்திர பொறியியலாளரை வரவழைத்து வழுக்களை இனங்கண்டு மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்று பழுதுபார்க்க வேண்டியிருந்த போதிலும் 2018 நவம்பர் மாதம் முதல் ஓட்ட நிலையில் காணப்படாத மேற்கூறப்பட்ட இயந்திரத்தின் வழுவை இனங்கண்டு மதிப்பீட்டு அறிக்கை பெற்று 2022 மார்ச் 11 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்க்கப்பட்டிருக்க வில்லை. | உதிரிப்பாகங்களை கண்டறிய முடியாமையின் அடிப்படையில் மிகுதி வேலை நடவடிக்கைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. | பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2014 ஆம் ஆண்டின் போது நன்கொடையாக கிடைத்த 03 கியூப் கொள்ளளவை உடைய புறோட்டோன் டிப்பர் வண்டி சபை வீதிகளில் ஓடுவதில் உள்ள பிரச்சினைகள் மற்றும் நிரந்தர சாரதியொருவர் காணப்படாமை என்பவற்றால் 2017 ஆம் ஆண்டு வரை வெளித்தரப்பினருக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது மீண்டும் சபைக்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆண்டு முதல் 2022 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் சபைக்கு வருமானமொன்றை உழைத்துக் கொள்வதற்கோ அல்லது சபையின் பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | டிப்பர் வண்டி இன்னுமொரு பிரதேச சபைக்கு கையளிக்குமாறு உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிப்பதற்காக நிதிச் செயற்குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இன்னுமொரு சபைக்கு கையளித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2015 ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்ப கோளாறினால் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,000,000 ஆன கல்உருளையை பழுதுபார்ப்பதற்காக அதன் சாரதியால் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் 10 ஆந் திகதி வரையில் 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த வழுக்களை இனங்கண்டு தொழில்நுட்ப அறிக்கையொன்றை பெற்று பழுதுபார்த்திருக்கவில்லை. | இயந்திரங்களை பரீட்சித்து பழுதுபார்ப்பற்கு தேவையான விரிவான அறிக்கையை வழங்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் இயந்திரத்தை எடுத்துச் செல்வதற்கு கணிசமான கிரயமொன்றை செய்ய வேண்டியேற்பட்டிருந்தமையால் நிதி செயற்குழு சபை அங்கீகாரம் வழங்கப்படாதிருந்தது. | இயந்திரத்தை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |